

சென்னை அடையாறு காமராசர் அவென்யூவில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தனது குடும்பத்தாருடன் சென்று, வரிசையில் நின்று வாக்களித்தார்.



அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியம் அங்கனூர் தமது சொந்த கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் விடு தலை சிறுத்தைகள் கட்சி தலைவர் எழுச்சி தமிழர் தொல்.திருமாவளவன் வாக்களித்தார்.



கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள தமது சொந்த கிராமமான வேலூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் வாக்களித்தார்.



தேனி மாவட்டம் போடி தொகுதி கழக வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பெரியகுளத்தில் உள்ள செவன்த்டே மெட்ரிக் பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.



மதுரை மத்திய தொகுதி கழக வேட்பாளர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தொகுதிக்குட்பட்ட மதுரை மாநகராட்சி காக்கைபாடினியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமது வாக்கினை பதிவு செய்தார்



மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள், தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் தனது வாக்கினை பதிவு செய்தார்.



திருச்சி வெஸ்டரிபள்ளி மைதானத்தில் உள்ள வாக்கு சாவடியில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அவர்கள் தமது வாக்கை பதிவு செய்தார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி அரளிக்கோட்டையில் வேட்பாளர் அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் வாக்களித்தார்




கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன், தனது சொந்த கிராமமான கழுதூர் அரசினர் மேல் நிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்களித்தார்.



சிவகங்கை மாவட்டம் கண்டனூர் சிட்டாள் ஆச்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி தனது வாக்கினை செலுத்தினார்.



மக்கள் நீதி மய்யம் கட்சித்தலைவர் கமல் ஹாசன் எம்.பி. அவர்கள், தனது மகள் ஸ்ருதிஹாசனுடன் வந்து சென்னை எல்டாம்ஸ் ரோடு, திருவள்ளுவர் சாலை சந்திப்பில் இருக்கும் சென்னை உயர்நிலைப்பள்ளியில், தன்னுடைய வாக்கை பதிவு செய்தார்.



நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு லெப்பை குடியிருப்பு அருகிலுள்ள பெரியநாயகிபுரம் ஆதிதிராவிடர் இந்து தொடக்கப்பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



மதுரை கிழக்கு தொகுதி கழக வேட்பாளர் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அய்யர்பங்களா அய்யாவு தேவர் நகரில் அமைந்துள்ள சேவியர் மேல்நிலைப் பள்ளியில் குடும்பத்துடன் வந்து தனது வாக்கை பதிவு செய்தார்



திருவண்ணாமலையில் உள்ள வாக்குச்சாவடியில் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளரும் துணை சபாநாயகருமான கு.பிச்சாண்டி தனது வாக்கினை பதிவு செய்தார்.